▲ பணி நிரந்தரம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, தமிழ்நாடு ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி திட்ட மாற்றுத்திறன் மாணவர்களுக்கான சிறப்பு பயிற்றுநர்கள் சங்கத்தினர் சென்னை டிபிஐ வளாகத்தில் தொடர் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். படம்:க.ஸ்ரீபரத்

செங்கல்பட்டு தடத்தில்

17 மின்சார ரயில்களின் சேவை நாளை ரத்து

● சிறப்பு ரயில்களை இயக்க ஏற்பாடு

■ சென்னை

செங்கல்பட்டு யார்டில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள உள்ளதால், இந்த தடத்தில் நாளை (ஜன. 31) 17 மின்சார ரயில்களின் சேவை ரத்து செய்யப்படுகின்றன. இருப்பினும், சிங்கப்பெருமாள்கோவிலில் இருந்து சென்னை கடற்கரைக்கு சிறப்பு ரயில்களை இயக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தெற்கு ரயில்வேயின் சென்னை கோட்டம் நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

பயணிகளின் பாதுகாப்பு மற்றும் ரயில்களின் இயக்கத்தை கருத்தில் கொண்டு செங்கல்பட்டு யார்டில் மேம்பாட்டு பணிகள் நாளை காலை 6.55 மணி முதல் மாலை 6 மணி வரையில் நடக்கவுள்ளன. எனவே, இந்த தடத்தில் மின்சார ரயில்களின் சேவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, அரக்கோணம்-செங்கல்பட்டுக்கு காலை 5.35, செங்கல்பட்டு-அரக்கோணம் காலை 8.20 மற்றும் சென்னை கடற்கரை-திருமால்பூர் மாலை 6, காஞ்சிபுரம் மாலை 6.40, செங்கல்பட்டுக்கு அதிகாலை 4.55, காஞ்சிபுரத்துக்கு அதிகாலை 5.45, செங்கல்பட்டுக்கு காலை 6.25, 7.05, 7.40, மாலை 3, 3.50 மணி ரயில்களின் சேவை முழுவதும் ரத்து செய்யப்படுகிறது.

செங்கல்பட்டு-சென்னை கடற்கரை காலை 7.25, 8.10, 8.50, 9.05, மாலை 5, 5,50 மணிக்கு செல்ல வேண்டிய மின்சார ரயில்களின் சேவையும் ரத்து செய்யப்படுகிறது. இதற்கு மாற்றாக பயணிகளின் வசதியை கருத்தில் கொண்டு சென்னை கடற்கரையில் இருந்து அதிகாலை 4.55, 5.45, காலை 6.25, 7.05, 7.40 மாலை 5, 5.50 மணிக்கு சிங்கப்பெருமாள் கோயிலுக்கு மின்சார சிறப்பு ரயில்கள் இயக்கப்படும்.

இதேபோல், சிங்கப்பெருமாள் கோவிலில் இருந்து காலை 6.40, 7.35, 8.20, 9, 9.35, மாலை 5.10, 6 மணிக்கு சென்னை கடற்கரைக்கு மின்சார சிறப்பு ரயில்கள் இயக்கப்படும்.

ஒரு பகுதி மட்டும் ரத்து: சென்னை கடற்கரை-செங்கல்பட்டுக்கு காலை 6, 6.45, 10.35, 11.15, மதியம் 12, 1, 2 மணி ரயில்களும், சென்னை கடற்கரை-திருமால்பூர் மதியம் 1.30 மணி ரயிலின் சேவைகளில் ஒரு பகுதி ரத்து செய்யப்பட்டு தாம்பரம் வரை மட்டுமே இயக்கப்படும்.

இதேபோல், காஞ்சிபுரம்-சென்னை கடற்கரை காலை 7.05, 9.45 மணி திருமால்பூர்-சென்னை கடற்கரை காலை 7.50, மாலை 6.15, செங்கல்பட்டு-சென்னை கடற்கரை காலை 8.30, 10.15, 11, மதியம் 1.25, 2.15, மாலை 3.05, 4.05 மணி மின்சார ரயில்கள் சேவையில் ஒரு பகுதி ரத்து செய்யப்பட்டு தாம்பரத்தில் இருந்து இயக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

மீனவர்கள் கொல்லப்பட்டதைக் கண்டித்து

திமுக சார்பில் திருவான்மியூரில் உண்ணாவிரதம்

● மா.சுப்பிரமணியன் உள்ளிட்டோர் பங்கேற்பு

■ சென்னை

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் 4 பேர் கொல்லப்பட்டதைக் கண்டித்து திருவான்மியூரில்சென்னைதெற்கு மாவட்ட திமுக சார்பில் நேற்று உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் 4 பேர் கொல்லப்பட்டதைக் கண்டித்தும், அதைத் தட்டிக் கேட்காத மத்திய, மாநில அரசுகளைக் கண்டித்தும் திருவான்மியூர் தெற்கு மாட வீதியில் நேற்று உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. சென்னை தெற்கு மாவட்ட திமுக செயலாளர் மா.சுப்பிரமணியன் எம்எல்ஏ தலைமையில் நடைபெற்ற இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் திமுக எம்எல்ஏக்கள் வாகை சந்திரசேகர், எஸ்.அரவிந்த் ரமேஷ், தலைமை செயற்குழு உறுப்பினர் மு.மகேஷ்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தட்டிக் கேட்கவில்லை

உண்ணாவிரதப் போராட்டத்தில் பேசிய மா.சுப்பிரமணியன், "கச்சத்தீவுப் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த கோட்டைப்பட்டினத்தைச் சேர்ந்த மீனவர்கள் மீது, இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தி விசைப்படகை மூழ்கடித்துள்ளனர். இதில் 4 மீனவர்கள் கொல்லப்பட்டனர். இதை மத்திய, மாநில அரசுகள் தட்டிக் கேட்கவில்லை. இதைக் கண்டித்து திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி இந்த ஒருநாள் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தியுள்ளோம்" என்றார்.

சென்னை தெற்கு மாவட்டத்துக்கு உட்பட்ட ஊரூர் குப்பம், ஆல்காட்குப்பம், ஓடை மாநகர், திருவான்மியூர், கொட்டிவாக்கம், பாலவாக்கம், சின்ன நீலாங்கரை, பெரிய நீலாங்கரை, சின்னாண்டி குப்பம், ஈஞ்சம்பாக்கம், பனையூர், நைனார் குப்பம் ஆகிய கடலோர கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கேற்றதாக மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

மின்வாரியத்தில் 10 ஆயிரம் கேங்மேன் நியமிக்க கோரி பேரணி

(C) KSL Media Ltd

■ சென்னை

மின்வாரியத்தில் 10 ஆயிரம் கேங்மேன் பணியிடங்களை நிரப்ப வலியுறுத்தி இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் சார்பில் சட்டப்பேரவை நோக்கிச் செல்லும் பேரணி சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானப் பகுதியில் நேற்று நடைபெற்றது.

சங்கத்தின் மாநிலத் தலைவர் என். ரெஜிஸ்குமார் தலைமையில் நடந்த பேரணியை மார்க்சிஸ்ட் முன்னாள் எம்எல்ஏ பீமாராவ் தொடங்கி வைத்தார். தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் பொதுச் செயலாளர் எஸ்.ராஜேந்திரன், ஜனநாயக வாலிபர் சங்கத்தின் மாநில செயலாளர் எஸ்.பாலா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

▲ மின்வாரியத்தில் 10 ஆயிரம் கேங்மேன் பணியிடங்களை நிரப்ப வலியுறுத்தி இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் சார்பில் சட்டப்பேரவை நோக்கிச் செல்லும் பேரணி சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானப் பகுதியில் நேற்று நடைபெற்றது. சங்கத்தின் மாநிலத் தலைவர் என்.ரெஜிஸ்குமார் தலைமையில் நடந்த பேரணியை மார்க்சிஸ்ட் முன்னாள் எம்எல்ஏ பீமாராவ் தொடங்கி வைத்தார். படம்:க.ஸ்ரீபரத்

▲ மேல்மருவத்தூர் சித்தர் பீடத்தில் தைப்பூச ஜோதி நேற்று முன்தினம் ஏற்றப்பட்டது. இதில் பங்காரு அடிகளார், உயர் நீதிமன்ற நீதிபதி சிவஞானம் ஆகியோர் பங்கேற்றனர்.

மேல்மருவத்தூர் சித்தர் பீடத்தில் தைப்பூச விழா

● ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஜோதி தரிசனம்

■ மேல்மருவத்தூர்

செங்கல்பட்டு மாவட்டம், மேல்மருவத்தூர் சித்தர் பீடத்தில் தைப்பூச ஜோதி நேற்று முன்தினம் ஏற்றப்பட்டது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று ஜோதி தரிசனம் செய்தனர்.

தைப்பூசத்தையொட்டி கடந்த டிச.11-ம் தேதிமுதல் தைப்பூச சக்தி மாலை அணிந்து, பக்தர்கள் இருமுடி எடுத்து வந்து கருவறையில் உள்ள சுயம்பு அம்மனுக்கு அபிஷேகம் செய்தனர். தைப்பூச விழாவையொட்டி கடந்த புதன்கிழமை சித்தர் பீடத்துக்கு வந்த பங்காரு அடிகளாருக்கு பக்தர்கள் பாதபூஜை செய்து வணங்கினர். மாலையில் ஆதிபராசக்தி ஆன்மிக இயக்கத் தலைவர் லட்சுமி பங்காரு அடிகளார் கலச விளக்கு வேள்வி பூஜையைத் தொடங்கி வைத்தார். விழாவில் பாஜக மாநிலங்களவை உறுப்பினர் இல.கணேசன் கலந்து கொண்டார்.

இதையடுத்து நேற்று முன்தினம் அதிகாலை சிறப்பு அபிஷேகத்துடன் தொடங்கிய விழாவிலும் பங்காரு அடிகளாருக்கு பக்தர்கள் பாத பூஜைகள் செய்தனர். ஆதிபராசக்தி ஆன்மிக இயக்கத் துணைத் தலைவர் ஸ்ரீதேவி ரமேஷ் அன்னதானத்தை தொடங்கி வைத்தார்.

இதைத் தொடர்ந்து குரு ஜோதியை லட்சுமி பங்காரு அடிகளார் ஏற்றி வைக்க, அதன் ஊர்வலத்தை ஆன்மிக இயக்க துணைத் தலைவர் கோ.ப.செந்தில்குமார் தொடங்கி வைத்தார்.

மாலையில் பங்காரு அடிகளார் முன்னிலையில், உயர் நீதிமன்ற நீதிபதி சிவஞானம் தைப்பூச ஜோதியை ஏற்றி வைத்தார். இவ்விழாவில் ஓய்வு பெற்ற நீதிபதிகள் முருகேசன், ராஜேஸ்வரன், பெரம்பலூர் மாவட்ட நீதிபதி கருணாநிதி உட்பட பலர் பங்கேற்றனர். மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி ஆன்மிக இயக்க அறங்காவலர் உமாதேவி ஜெய்கணேஷ் பிரசாத விநியோகத்தை தொடங்கி வைத்தார். விழாவுக்கான ஏற்பாட்டை மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி ஆன்மிக இயக்கத்துடன் இணைந்து ஈரோடு மாவட்ட ஆதிபராசக்தி மன்றங்கள் செய்திருந்தன.

IGARASHI
MOTORS INDIA LTD.
Regd. Office : Plot No. B-12 to B-15, Phase II, MEPZ-SEZ,
Tambaram, Chennai - 600045, Phone No. : +91-44-42298199
Website: www.igarashimotors.com, Email : investorservices@igarashimotors.co.in
CIN : L29142TN1992PLC021997

NOTICE

Notice is hereby given that pursuant to Regulation 29 and 47 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, Notice is hereby given that a meeting of the Board of Directors will be held on Tuesday, February 09, 2021 to consider and approve the Un-audited financial results of the Company as per IndAs format for the third quarter ended December 31, 2020. A copy of the said notice and Un-audited Financial Results shall also be available on Company's website at www.igarashimotors.com and also on Stock Exchange's website at www.bseindia.com and www.nseindia.com

For Igarashi Motors India Limited
P.Dinakara Babu
Company Secretary

Place : Chennai
Date : 29.01.2021

அனகாபுத்தூர் மற்றும் மீஞ்சூர் பகுதிகளில்

காஸ் சிலிண்டர் வெடித்து 22 குடிசைகள் எரிந்து சேதம்

■ தாம்பரம்/ பொன்னேரி

அனகாபுத்தூர் மற்றும் மீஞ்சூர் பகுதிகளில் சமையல் காஸ் சிலிண்டர் வெடித்து, 22 குடிசைகள் எரிந்து சேதமடைந்தன.

செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரம் அடுத்த அனகாபுத்தூர் சாந்தி நகரில் 600-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. இதில் 100-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடிசைகளில் வசித்து வருகின்றன. அந்தப் பகுதியில் முனியப்பன் என்பவருக்கு சொந்தமான குடிசை வீட்டில் காஸ் சிலிண்டர் வெடித்து தீப்பிடித்தது. உடனே அருகில் இருந்த குடிசைகளுக்கும் தீ பரவியது. இதைத் தொடர்ந்து 2 தீயணைப்பு வாகனங்களில் வந்த தீயணைப்பு வீரர்கள் பல மணி நேரம் போராடி தீயை அணைத்தனர்.

ஆனால், அதற்குள் 21 குடிசை வீடுகள் சேதமடைந்தன. வீட்டில் வைக்கப்பட்டிருந்த உடைமைகள், மின்சாதன பொருட்கள் பணம் ஆகியவை தீயில் கருகின. இது தொடர்பாக சங்கர் நகர் போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

அதேபோல் திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் அருகே உள்ள நெய்தவாயல் கிராமத்தைச் சேர்ந்தவர் சாந்தி(40). இவர், நேற்று முன்தினம் இரவு தன் குடிசை வீட்டில் உறங்கிக் கொண்டிருந்தார். அப்போது, மின்கசிவு காரணமாக வீட்டின் ஒரு பகுதியில் திடீரென தீப்பற்றியதாக கூறப்படுகிறது.

இதைக் கண்ட சாந்தி உடனே வீட்டைவிட்டு, வெளியேறினார். தொடர்ந்து, கொழுந்துவிட்டு எரிந்த தீயினால் சமையல் காஸ் சிலிண்டர் வெடித்தது. இதனால், குடிசை முழுவதும் தீப்பற்றி எரிந்து சாம்பலானது. இந்த விபத்தில், வீட்டில் இருந்த ரூ.10 ஆயிரம் பணம், ஆதார், ரேஷன் கார்டு உள்ளிட்டவை தீக்கிரையாகின.

▲ சென்னையை அடுத்த அனகாபுத்தூர் சாந்தி நகரில் காஸ் சிலிண்டர் வெடித்து 21 குடிசைகள் நேற்று தீக்கிரையாகின. படம்: எம்.முத்துகணேஷ்

வழக்கில் பிணை பெற்று தலைமறைவானவர் சிக்கினார்

● போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்ட 3 பேர் கைது

■ சென்னை

சென்னை பெருநகர காவல் நிலையங்களில் பதிவான குற்ற வழக்குகளில் நீதிமன்ற பிணை பெற்றுச் சென்ற பின்னர், நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாக இருந்துவரும் குற்றவாளிகளை விரைந்து கைது செய்ய போலீஸாருக்கு காவல் ஆணையர் மகேஷ் குமார் அகர்வால் உத்தரவிட்டுள்ளார்.

இதற்காக சென்னையில் உள்ள அனைத்து காவல் நிலைய ஆய்வாளர்கள் தலைமையிலும் தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் குற்ற வழக்கில் சிக்கி நீதிமன்ற பிணை பெற்று பின்னர் தலைமறைவாக இருந்த கொளத்தூர், அம்பேத்கர் நகரைச் சேர்ந்த மதன் குமார் (33) என்பவரை போலீஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர். பிணையில் வெளியே வந்து, 2018-ம் ஆண்டு முதல் நீதிமன்ற விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாக இருந்ததால், அவர் கைது செய்யப்பட்டார்.

ராயப்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான தனிப்படையினர் நேற்று காலை அதே பகுதியில் நடேசன் ரோடு மற்றும் லாயிட்ஸ் ரோடு சந்திப்பு அருகே கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அங்கு இருசக்கர வாகனத்தில் வந்த 3 நபர்களை நிறுத்தி விசாரணை செய்தபோது, அவர்கள் இருசக்கர வாகனத்தில் 10 கிலோ கஞ்சா பொட்டலங்களை மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது.

இதையடுத்து இருசக்கர வாகனத்தில் கஞ்சா எடுத்துச் சென்ற திருவல்லிக்கேணி முகமது யாசின் (30), அதே பகுதி சையது ஹமீது (24), ராயப்பேட்டை முகமது நாசிம் (23) ஆகிய 3 பேரை கைது செய்தனர். இவர்கள் கல்லூரி மாணவர்கள் உட்பட பல தரப்பினருக்கு விற்பனை செய்ய கஞ்சா கடத்தி சென்றதாக தங்களிடம் தெரிவித்ததாக போலீஸார் கூறினர்.

ਪੰਜਾਬ ਨੈਸ਼ਨਲ ਬੈਂਕ ...भरोसे का प्रतीक !
பஞ்சாப் நேஷனல் வங்கி ...the name you can BANK upon !

மண்டல சாஸ்ட்ரா மையம், சென்னை-63, R.K. சாலை, மைலாப்பூர், சென்னை - 600 004, E-mail: zs8341@pnb.co.in

SARFAESI சட்டம் 2002ன் கீழ் மின் ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்துகளை சீரமைத்தல், கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002ன்கீழ் பஞ்சாப் நேஷனல் வங்கியிடம் அடமானத்திலுள்ள ஈடுபெற்ற அசையா சொத்துக்கள் விற்பனை

பஞ்சாப் நேஷனல் வங்கி, சென்னை, அதிகாரபூர்வ அதிகாரி தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி மேற்படி சட்டம் பிரிவு 13(2)ன் கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்துகளை சீரமைத்தல், கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002ன் கீழ், புதிய எண்.10, பழைய எண். 122, 2ம் தளம், P.S. சிவசாமி சாலை (சுல்லிவன் தோட்டம் சாலை) தூய எப்பாஸ் அவென்யூ, மைலாப்பூர், சென்னை - 600 004 என்ற முகவரியில் உள்ள **M/s. Gho ஆக்ரோ பிரைவேட் லிமிடெட்** என்ற நிறுவனத்திற்கு **05.02.2020 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பினை (Demand Notice)** அனுப்பி அதன் பின்பு அதிகாரபூர்வ அதிகாரி **M/s. GHO ஆக்ரோ பிரைவேட் லிமிடெட்,** (இனி கடன்தாரர் என்று அழைக்கப்படுவார்) என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட கடன் வசதிகள் தொடர்பாக கடனுக்கு ஈடான கீழ்க்காணும் சொத்துக்களை SARFEASI சட்டம் 13(4) பிரிவின் கீழ் **08.09.2020** அன்று **அடையாள சுவாதீனத்தில்** எடுத்துக் கொண்டார். ஆக மேலே குறிப்பிட்ட கடன்தாரர் (கள்), அடமானதாரர் (கள்) மற்றும் ஜாமீன்தாரர் (கள்) அவர்களிடமிருந்து பஞ்சாப் நேஷனல் வங்கிக்கு வந்துசேர வேண்டிய **01.02.2020** அன்றுள்ளபடி கடன்பாக்கியான ₹. **48,78,74,701.84 (ரூபாய் நாற்பத்து எட்டு கோடியே எழுபத்து எட்டு இலட்சத்து எழுபத்து நான்காயிரத்து எழுநூற்று ஒன்று மற்றும் பைசா எண்பத்து நான்கு மட்டும்)** மற்றும் **01.01.2020** முதல் வசூலாகும் காலம் வரை அதன் மீதான வட்டி கட்டணம் மற்றும் இதர செலவுகள் ஆகியவற்றையும் சேர்த்து வசூலிப்பதற்காக கீழ்க்காணும் கடனுக்கு ஈடான அசையா சொத்துக்களை **"உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளபடி" மற்றும் "என்ன உள்ளதோ அப்படியே" என்ற நிலையில்** பொது மின் ஏலம் மூலமாக 15.02.2021 அன்று விற்பதென முடிவு செய்துள்ளார்.

அசையா சொத்துக்களின் விபரம்

வகை எண்1. (A) திருமதி. ரீடா சோர்டியா, க/பெ திரு. விமல் ராஜ் சோர்டியா மற்றும் திருமதி. நிதி ஜெயின் க/பெ திரு. ஹேமந்த் சோர்டியா ஆகியோரின் உரிமைப் பெற்ற ஸ்ரீபெரும்புதூர் சாலை, திருகச்சூர் கிராமம், செங்கல்பட்டு வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்-603204 இல் அமைந்துள்ள மறு சர்வே எண்.348C/2C1B (பழைய சர்வே எண்.348/2C), (பட்டா எண்.2108, பத்திர எண். 1763/ 2012) இல் அடங்கிய மொத்தம் 67 சென்ட்கள் விஸ்தீரணம் கொண்ட ஈடுபெற்ற காலி நிலம். **(B)** திருமதி. உகமகவர் அவர்களின் உரிமைப் பெற்ற ஸ்ரீபெரும்புதூர் சாலை, திருகச்சூர் கிராமம், செங்கல்பட்டு வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்-603204 இல் அமைந்துள்ள மறு சர்வே எண்.348C/2 இல் அடங்கிய மொத்தம் 1.50 சென்ட்கள் விஸ்தீரணம் கொண்ட ஈடுபெற்ற காலி நிலம். **(C)** திருமதி. உகமகவர் அவர்களின் உரிமைப் பெற்ற ஸ்ரீபெரும்புதூர் சாலை, திருகச்சூர் கிராமம், செங்கல்பட்டு வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்-603204 இல் அமைந்துள்ள மறு சர்வே எண்.348C/2B (பழைய சர்வே எண்.348C/2) இல் அடங்கிய மொத்த விஸ்தீரணம் 86 சென்ட்கள் + மொத்த விஸ்தீரணமான 1.50 சென்ட்களில் உள்ள கிணறு, 3 HP பம்பு செட் மற்றும் பிரிக்கப்படாத 1/4 பங்கு. **(D)** திருமதி. உகமகவர் அவர்களின் உரிமைப் பெற்ற ஸ்ரீபெரும்புதூர் சாலை, திருகச்சூர் கிராமம், செங்கல்பட்டு வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்-603204 இல் அமைந்துள்ள மறு சர்வே எண்.348C/1A1, (பழைய சர்வே எண்.348/C/2,) இல் அடங்கிய 49 சென்ட்கள் (55 சென்ட்களில், நெடுஞ்சாலைத் துறையால் வாங்கப்பட்ட 6 சென்ட்கள்) விஸ்தீரணம் கொண்ட ஈடுபெற்ற காலி நிலம். **(E)** திருமதி. உகமகவர் அவர்களின் உரிமைப் பெற்ற ஸ்ரீபெரும்புதூர் சாலை, திருகச்சூர் கிராமம், செங்கல்பட்டு வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்-603204 இல் அமைந்துள்ள சர்வே எண் .348C/1A2 இல் அடங்கிய 42.89 சென்ட்கள் (54 சென்ட்களில், நெடுஞ்சாலைத் துறையால் வாங்கப்பட்ட 11.11 சென்ட்கள்) விஸ்தீரணம் கொண்ட ஈடுபெற்ற காலி நிலம். **(F)** திரு. விமல்ராஜ் சோர்டியா அவர்களின் உரிமைப் பெற்ற ஸ்ரீபெரும்புதூர் சாலை, திருகச்சூர் கிராமம், செங்கல்பட்டு வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்-603204 இல் அமைந்துள்ள மறு சர்வே எண்.348C/2, இல் அடங்கிய 1.50 சென்ட்கள் விஸ்தீரணம் கொண்ட ஈடுபெற்ற காலி நிலம். **(G)** திருமதி. உகமகவர் அவர்களின் உரிமைப் பெற்ற ஸ்ரீபெரும்புதூர் சாலை, திருகச்சூர் கிராமம், செங்கல்பட்டு வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்-603204 இல் அமைந்துள்ள பழைய சர்வே எண்.348C/1A. மறு சர்வே எண்.348C/1A1 இல் அடங்கிய 54 சென்ட்கள் விஸ்தீரணம் கொண்ட ஈடுபெற்ற காலி நிலம்.

ரிசர்வ் தொகை: ₹ 18.50 கோடிகள்; டெபாசிட் செய்ய வேண்டிய தொகை (EMD): ₹ 1.85 கோடிகள்

வகை எண்2. திருமதி. ரஞ்சித்மல் சோர்டியா அவர்களின் உரிமைப் பெற்ற சந்தோஷபுரம், வேங்கைவாசல் கிராமம், சோழிங்கநல்லூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டத்தின் பட்டா எண்.4762 படி சர்வே எண்.55/32 , பட்டா எண்.1633 & 1635 படி பழைய சர்வே எண்.53/5A2(பகுதி) இல் அடங்கிய CMDA வின் அங்கீகாரத்தின் படி எண்.55/1997 படி மனைபிரிவில், எண்.II "ஆதிநாத் அவின்யூ" ஃபேஸ்-I, 6480 ச.அடி கொண்ட ஈடுபெற்ற காலி நிலம்.

ரிசர்வ் தொகை: ₹ 1.25 கோடிகள்; டெபாசிட் செய்ய வேண்டிய தொகை (EMD): ₹ 0.13 கோடிகள்

EMD செலுத்த கடைசி தேதி	12.02.2021 மாலை 5.00 மணி வரை
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியிடம் முன் அனுமதி பெற்று சொத்துக்களை பார்வையிடுதல்	08.02.2021 முதல் 10.02.2021 வரை

மின்ஏலம் விற்பனை நடைபெறும் தேதி : 15.02.2021

நேரம்: வகை எண்.1 : காலை 11.00 மணிக்கு மொத்தமாக விற்கப்படும்; வகை எண்.12: காலை 11.30 மணிக்கு மொத்தமாக விற்கப்படும்

ஏல உயர்வு (ஏலத்தை உயர்த்திக் கோருவதற்கான குறைந்தபட்ச தொகை) : வகை எண். 1 க்கு: ₹ 2,00,000/-, வகை எண். 2க்கு: ₹ 50,000/-

மின்ஏலத்தின் நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள்

1. இந்த மின்ஏல விற்பனையானது இணைதள முகவரியான **http://www.mstcecommerce.com/**"இணையவழி மின் ஏலம் மூலம்" நடைபெறும்
2. இந்த மின்ஏல விற்பனைக்கான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளுக்கான விவரங்களுக்கு, **https://www.ibapi.in, https://eprocure.gov.in/epublish/app, http://www.mstcecommerce.com/, www.pnbindia.in.** ஆகிய இணையதளங்களில் காணலாம்.
3. இந்த மின்ஏலத்தில் கலந்துகொள்ள விருப்பமுள்ளவர்கள் இந்த மின்ஏலத்திற்கான செயல்பாடுகள் பகுதியில் உதவி கையேடு, விற்பனை அறிவிப்பின் பிரதிகள், மின்ஏல நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள், ஆகியவற்றை e-Bक्रय–IBAPI **(https://www.ibapi.in)** என்ற இணையதளத்திலிருந்து கட்டணமில்லாமல் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.
4. எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்த நேரத்திலும் ஏலத்தின் விதிமுறைகளை ஏலத்தின் விதிமுறைகளை ஒத்திவைக்க / ரத்துசெய்ய / ஒத்திவைக்க / நிறுத்துவதற்கு அல்லது மாறுபடுவதற்கான எந்தவொரு முயற்சியையும் ஏற்றுக்கொள்ள அல்லது நிராகரிக்கும் உரிமை அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு உரிமை உண்டு, அவரின் முடிவே இறுதியானது.
5. கடனீட்டுச் சொத்துக்களை ரிசர்வ் விலைக்கு கீழ விற்கப்படமாட்டாது.
6. ஏலத்தில் வங்கியும் வெளிப்படையாக பங்கெடுக்கு உரிமை உண்டு.

இடம் : சென்னை
தேதி : 30.01.2021

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
பஞ்சாப் நேஷனல் வங்கி, மண்டல சாஸ்ட்ரா மையம், சென்னை (கடன் வழங்கியவர்)

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படும்முன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

வரி விளம்பரங்கள்

சுய செய்தி

பெயர்மாற்றம்

I, SUNITA wife of Ashok Kumar, Born on 01.08.1972 Residing at Flat 1-D Block-2 M32/33, Mahalakshmi Apts. Kamaraj Nagar, Thiruvanmiyur, Chennai-600041. TN. Shall henceforth be known as SUNITHA DEVI

திருமணசேவை மையம்

1000 days Validity+ Free Benefits One Time Regn. Fees Rs.1000. www.brahminkalyanam.com, hindusmatri.com. 89397 02500

ஆட்கள் தேவை

அரிய வாய்ப்பு

Permanently Admin Work for Jobless Qualified Male or Female 7397396859,8056000945

தையல்

Wanted Female Receptionist for Women Tailoring Shop at Pallikaranai. Cell: 98847 11299

Published by N. Ravi at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 on behalf of KSL MEDIA LIMITED, and Printed by D.Rajkumar at Plot B-6 & B-7, CMDA Industrial Complex, Maraimalai Nagar, Chengleput Taluk, Kancheepuram Dist., Pin: 603209. Editor: K. Asokan (Editor responsible for selection of news under the PRB Act).